**செய்தி வெளியீடு எண்: 42** **நாள்: 21.01.2013**

# செய்தி வெளியீடு

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே''
''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே''

என்று ஆன்றோர், மக்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்துள்ளனர். இந்த வழியில் தமிழகத்தில் கல்லாதவர்களே இருக்கக்கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது

தமிழகத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் நலனுக்காகவும், தொழில் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதற்காகவும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற் பயிற்சி நிலையங்கள் (Industrial Training Institute) அரசால் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் தற்போது **62** அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் **39** பொறியியல் மற்றும் **17** பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இத் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியர்கள் பெரும்பாலும் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் ஏழை எளிய குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதால், அவர்கள் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு வந்து செல்வதற்கு வசதியாக அவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழுங்கவும், இப் பயிற்சி நிலையங்களில் கணினி சம்பந்தப்பட்ட பாடப் பிரிவுகளில் பயிலும் மாணவ, மாணவியருக்காக விலையில்லா மடிக்கணினி வழங்கவும், இந்த மாணவ, மாணவியர்களுக்கு வருமான உச்ச வரம்பின்றி, அனைத்து மாணவர்களுக்கும் ஒரே சீரான உதவித் தொகையாக மாதந்தோறும் **500** ரூபாய் வழங்கவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

**62** அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் **58** அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன. இந்த கட்டடங்கள் அனைத்தும் **40** வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டவை. இதனால் இந்த கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன. எனவே இந்தக் கட்டடங்களில் உள்ள வகுப்பறைகள், தொழிற் கூடங்கள், கழிப்பறைகள், மின் வயரிங், தரைப்பகுதி, கூரைப் பகுதி ஆகியவற்றை புனரமைக்கவும், தண்ணீர் வசதி மற்றும் கழிப்பறை வசதிகளை மேம்படுத்தவும், தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு செய்முறைக்கு தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வழங்குவதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது.

அதன் அடிப்படையில், முதற்கட்டமாக, அரியலூரிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புனரமைப்பு பணிகளுக்காக 39.74 லட்சம் ரூபாய், செய்முறைக்கு தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு 40.26 லட்சம் ரூபாய், என மொத்தம் 80 லட்சம் ரூபாய், குன்னுரிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புனரமைப்பு பணிகளுக்காக 50 லட்சம் ரூபாய், செய்முறைக்குத் தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு 50 லட்சம் ரூபாய் என மொத்தம் 1 கோடி ரூபாய், நாகப்பட்டினத்திலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புனரமைப்பு பணிகளுக்காக 40 லட்சம் ரூபாய், செய்முறைக்கு தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு 40 லட்சம் ரூபாய், என மொத்தம் 80 லட்சம் ரூபாய், திருச்சி மாவட்டம், திருவெறும்பூரில் உள்ள தொழிற் பயிற்சி நிலைய புனரமைப்பு பணிகளுக்காக 81.46 லட்சம் ரூபாய், செய்முறைக்கு தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்காக 38.54 லட்சம் ரூபாய் என மொத்தம் 1 கோடியே 20 லட்சம் ரூபாய், கோயம்புத்தூரில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புனரமைப்பு பணிகளுக்காக 62.50 லட்சம் ரூபாய், செய்முறைக்கு தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்காக 62.50 லட்சம் ரூபாய், என மொத்தம் 1 கோடியே 25 லட்சம் ரூபாய், சென்னை (வடக்கு) தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புனரமைப்பு பணிகளுக்காக 45 லட்சம் ரூபாய், செய்முறைக்கு தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்காக 45 லட்சம் ரூபாய், என மொத்தம் 90 லட்சம் ரூபாய், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புனரமைப்பு பணிகளுக்காக 50 லட்சம் ரூபாய், செய்முறைக்கு தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு 50 லட்சம் ரூபாய் என மொத்தம் 1 கோடி ரூபாய், ஈரோட்டில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புனரமைப்பு பணிகளுக்காக 37.50 லட்சம் ரூபாய், செய்முறைக்கு தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு 37.50 லட்சம் ரூபாய் என மொத்தம் 75 லட்சம் ரூபாய், தூத்துக்குடியிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புனரமைப்பு பணிகளுக்காக 63.65 லட்சம் ரூபாய், செய்முறைக்கு தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்காக 56.35 லட்சம் ரூபாய் என மொத்தம் 1 கோடியே 20 லட்சம் ரூபாய், தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புனரமைப்பு பணிகளுக்காக 70 லட்சம் ரூபாய், செய்முறைக்கு தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு 30 லட்சம் ரூபாய் என மொத்தம் 1 கோடி ரூபாய், திண்டுகல்லில் உள்ள தொழிற் பயிற்சி நிலையத்திற்கு புனரமைப்பு பணிகளுக்காக 50 லட்சம் ரூபாய், செய்முறைக்கு தேவையான நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு 50 லட்சம் ரூபாய், என மொத்தம் 1 கோடி ரூபாய், என 11 தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு 10 கோடியே 90 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள், தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் சிறந்த கல்வி பெற வழிவகை செய்யும்

*****

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:– 21.1.2013.